**தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பராயம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால்,

நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 11.1ஆம் பந்தி | எந்தவொரு நிதியாண்டினதும் சனவரி 31ஆந் திகதிக்கு முன்னர் மீளாய்வாண்டுக்கான பொருள் மெய்மையாய்வுப் பணிகள் பௌதீக ரீதியில் நிறைவு செய்யப்பட வேண்டிய | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தொகுதி அடிப்படையில் பதவியணியினர் | பொருள் மெய்மையாய்வுப் பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும், மீளாய்வாண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வுப் பணிகள் 2021 ஏப்ரல் 09ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சேவைக்கு வரவழைக்கப்பட்டதுடன், தடைகளுக்கு மத்தியில் 2021 மே 10ஆந் திகதி நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2010 இன் 12ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 3(ஆ), 3(இ) மற்றும் 3(ஈ) உப பிரிவகள் | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் தொடர்பான சஞ்சிகைகள், நாளிதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல், ஆய்வு அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் வாசிகசாலை மற்றும் தகவல் வழங்கும் சேவைகளை தாபித்தல் மற்றும் அவற்றை பராமரித்தல் ஆகியன நிறுவகத்தின் பிரதான நோக்கங்களான போதிலும், அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த இலக்கிடப்பட்ட குழுக்களுக்கு அறிவூட்டும் நோக்கில் “NILS News Letter” எனும் பெயருடைய நாளிதழொன்று வெளியிடப்பட்டுள்ளது. மேலும், “ஆராய்ச்சிக் வெளியீடுகள் மற்றும் செயற்திட்டங்கள்” எனும் பெயருடைய பிரிவொன்று தாபிக்கப்பட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் ஆண்டுக்குரியதாக ஆராய்ச்சி செயலமர்வொன்றினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும், கொவிட் தொற்றுநோய் நிலமை காரணமாக அந்த நிகழ்ச்சித்திட்டம் ஆக்கபூர்வமானதாக முன்னெடுக்கப்படவில்லை. | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 2020 ஆகஸ்ட் 09ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் | தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் தொழில் விடயப்பரப்பினுள் உள்ளடங்குகின்ற போதிலும், 2010 இன் 12ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் | தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டம் உரிய நிறுவக மற்றும் சட்டக் கட்டமைப்பின் கீழ் | தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தினை தொழில் அமைச்சிக் விடயப்பரப்பினுள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் I ஆம் பகுதி (i) பந்தி | அதிகாரச்சட்டம், நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் கீழ் உள்ளடக்கித் தருமாறு தொழில் அமைச்சினூடாக சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போது முன்மொழியப்பட்டுள்ளது. | உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஈ) | 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16.2 பிரிவு | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | 02/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் போது செயலாற்றல் அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

## 1.6 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் செயற்பாட்டுப் பணிகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்வததற்காக பேணப்பட வேண்டிய வங்கி மீதியை இனங்கண்டு, எஞ்சிய பணத்தை குறுங்கால சேமிப்பு முறைமையொன்றினுள் முதலீடு செய்யும் நடைமுறையொன்று இன்காணப்படாத காரணத்தால், மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் ரூபா 5 மில்லியன் முதல் ரூபா 21 மில்லியன் வரையான அளவில் பணம் வங்கியின் நடைமுறைக் கணக்கில் காணப்பட்டது. அதன் மூலம் நிறுவனத்திற்கு ஈட்டக்கூடிய வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டுச் சபைக்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு, மதாந்த செலவினத்தை மேற்கொள்ள போதுமான அளவான பணம் நடைமுறைக் கணக்கில் வைத்து, எஞ்சிய தொகையை நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்வதற்கு அல்லது வங்கியுடன் கலந்துரையாடி குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், கொவிட் தொற்றுநோய் நிலமை காரணமாக எதிர்பார்த்தவாறு வருமானம் கிடைக்காமையால் திரவத்தன்மையை பேணுவதற்காக பணத்தை நிலையான வைப்புகளில் வைப்பிட முடியாது போனது. | மேலதிக வங்கி மீதியை இனங்கண்டு, குறுங்கால முதலீடொன்றில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 7,426,319 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 210,316 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 7,636,635 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கொவிட் 19 தொற்றுநோய் நிலமை காரணமாக நிறுவகத்திற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடநெறிகளை நடாத்த முடியாமையால் கடந்த வருடத்தில் ஈட்டப்பட்ட ரூபா 34.12 மில்லியனான வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 15.93 மில்லியன் வரை குறைவடைவதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| பிரதான வருமானம் / செலவின விடயம் | 2020 (ரூபா) | 2019 (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாட்டின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| வருமானம் | 15,932,955 | 34,124,989 | (18,192,034) | (53) |
| அரச மானியங்கள் | 6,100,000 | 10,768,853 | (4,668,853) | (43) |
| நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | 3,173,959 | 10,867,467 | (7,693,508) | (71) |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 26,285,315 | 33,876,058 | (7,530,853) | (22) |

கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வருமானம் மற்றும் அரச மானியங்களின் பெறுவனவு ஆகியன 48 சதவீதத்தினாலும், மூலதனச் செலவினம் 71 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2001 ஆம் ஆண்டின் போது தொழில் திணைக்களத்தின் ஊழிய கற்கைகள் பிரிவிற்கு வெகுமதியளிக்கப்பட்ட வேன் வண்டியொன்று, 2008ஆம் ஆண்டின் போது ஊழிய கற்கைகள் பிரிவு தொழில் திணைக்களத்திலிருந்து பிரிந்து தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமாக தாபிக்கப்பட்ட போது | கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதன் முதல் கோவை மற்றும் கையளிப்புக் கோவையை பெற்றுத்தருமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவித்து மீண்டும் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்ட போதிலும், இதுவரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |

அந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனம் நிறுவகத்திற்க உரிய முறையில் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. வாகனத்தின் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனத்தின் பதிவு இலக்கத்திற்கு ஒத்த வாகனமொன்று தனிநபர் ஒருவரிடம் காணப்படுவதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன், நிறுவகத்தினால் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு 2020 சனவரி 05ஆந் திகதி முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் அந்த பணியகத்தினால் நீதிமன்றக் கட்டளையொன்றின் ஊடாக அந்த வாகனத்திற்குரிய ஆரம்ப கோவை மற்றும் கையளிப்புக் கோவை ஆகியவற்றை பணியகத்திற்கு சமர்ப்பிக்குமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் இந்த கோவைகள் வழங்கப்படாத காரணத்தால் விசாரணைப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட | கொவிட் தொற்றுநோய் காரணமாக நிதி நிலைமை | நிறுவகத்தின் நோக்கங்களை

| | | | |
|---|---|---|---|
| | பதவியணி 45 ஆக காணப்படுவதுடன், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணி 17 ஆக, அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 38 சதவீதமாக காணப்பட்டது. அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 09 பதவிகளில் 06 பதவி வெற்றிடங்கள் நிலவின. | சவாலுக்கு உள்ளாகியுள்ளமையால், அதற்குரிய அனைத்து பதவியணியை அவ்விதத்திலேயே ஆட்சேர்ப்பு செய்ய இயலாது. நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பில் மீளாய்வொன்றினை மேற்கொள்வதற்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் | நிறைவேற்றுவதற்கு தேவையாக பதவியணியை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 2020 யூலை மாதத்தின் போது நிறுவகத்தின் ஆராய்ச்சி, வெளியீடுகள் மற்றும் செயற்திட்டப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பிரிவிற்காக பதிற்கடமை உதவிப் பணிப்பாளர் ஒருவர் மாத்திரம் காணப்படுவதுடன், மற்றுமொரு பதவியணியொன்று 2021 ஏப்ரல் 10ஆந் திகதி வரையிலும் இணைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை . அதன் பிரகாரம், இந்த பிரிவினை தாபித்தமைக்கான நோக்கங்களை நிறைவேற்றுதல் மந்தமான நிலையில் காணப்பட்டது. | நிலவும் மட்டுப்படுத்தப்பட்ட மனிதவள மற்றும் நிதி வளங்களை கருத்திற்கொண்டு உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்காக கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த தொற்றுநோய் நிலைமை வழமைக்கு திரும்பிய பின்னர் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக பதவியணியை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் தேவைப்பாடுகளுக்கமைய பதவியணியை ஆட்சேர்ப்பு செய்தல், வினைத்திறன் காண் தடைப்பரீட்சைம ற்றும் மதிப்பாய்வுகள் மற்றும் சேவைத் தரமேற்றல் | பரீட்சைகள் பிரிவிற்குரிய வளப் பங்களிப்பாளர்களை தெரிவு செய்தல், கொடுப்பனவுகளை முறையாக மேற்கொள்வதற்காக நடைமுறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்குள்ள கட்டுப்பாட்டு முறைகளுக்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள | அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறையொன்றினை பின்பற்றுதல், இரகசியத்தன்மையை பேணுதல் ஆகியவற்றுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு முறைமை |

| | | |
|---|---|---|
| ஆகியவற்றுக்கான பரீட்சைகள் பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படும். எனினும், வினாத்தாள்களை தயாரித்தல், வினாத்தாள்களை மதிப்பிடு செய்தல் ஆகியன ஒரே நபரால் மேற்கொள்ளப்படுவதுடன், இதன் காரணமாக பரீட்சை மோசடிக் ஏற்படுவதற்கான அச்சுறுத்தலொன்று நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. மேலும், பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பில் நிறுவனத்தில் காணப்படும் உள்ளக நடைமுறையை காண்பிக்கும் பாய்வு நிரல்படம் (Flow Chart) ஆகியவை கணக்காய்வினால் அவதானிக்கப்படாததுடன், அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறையொன்றினை பின்பற்றுதல், இரகசியத்தன்மையை பேணுதல் ஆகியவற்றை மதிப்பிடு செய்வதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | போதிலும், அதற்காக பரீட்சைகள் பிரிவின் பணிகளை முறைமைப்படுத்தி தரமான சேவையினை வழங்குதல் நோக்காக கொள்ளப்பட்டுள்ளது. பரீட்சை மோசடிக் ஏற்படுவதை தடுத்தல், இரகசியத்தன்மையை பேணுதல் ஆகியவற்றுக்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாக உள்ளது. பரீட்சைகளை நடாத்தும் போது உள்ளக நடைமுறையின் இரகசியத்தன்மையை பாதுகாக்கும் தகவல்களை கணக்காய்விற்கும் சமர்ப்பிக்க முடியாது என்பதை வலியுறுத்துகின்றேன். | ஆகியவற்றின் தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். கணக்காய்வு இரகசியத்தன்மையை பேணுவதற்கு கடப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை 2021 ஏப்ரல் 10ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. பாராளுமன்ற சபாநாயகரின் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட புதிய வழிகாட்டிகளுக்கமைய, இறுவட்டுக்களை (CD) வழங்குவதற்குப் பதிலாக, அச்சிடப்பட்ட 300 பிரதிகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென இந்த வருடத்தின் முன்னரைப் பகுதியில் அறிவிக்கப்பட்டுள்ளமையால், | ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஆண்டறிக்கையை அச்சிடுவதற்காக புதிய கொள்வனவினை மேற்கொள்ள நேர்ந்தது. அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு துரித நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த தாமதம் இடம்பெறுவதற்கு நடைமுறையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அமைந்துள்ளது.